REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0. (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 9உ வெள்ளி (25—10—57) ★ ★ வெளியீடு: ஐப்பசி 10உ சனி (26—10—57) [இதழ் 114

சுவிஸ் பேராசிரியருக்கு நோபல் பரிசு!

ஸ்டாக்ஹோம், அக். 24—

உடற்கூறு சாஸ்திரம், மற்றும் மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு, இந்த ஆண்டு, சுவிஸ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் டேனியல் போவெத் என்பாருக்குக் கிடைத்திருக்கிறது.

இந்தித் திணிப்பிற்கு எதிராகத் தமிழகத்தின் எழுச்சி கண்டு பண்டிதர் பொருமல்!

'பஞ்சாப் ஆர்ப்பாட்டம் இந்தி பரவுவதற்குத் தீங்கு இழைத்துவிட்டதே'

தென்னாட்டில் எதிர்ப்புக் கிளம்புவதாக ஓலம்!

புதுடில்லி, அக். 24—

பஞ்சாபில் நடைபெறும் இந்திக் கிளர்ச்சி, இந்திக்கே பெரும் தீங்கு விளைவித்துவிட்டதாகப் பண்டிதர் கூறியிருக்கிறார்!

"இந்த மொழித் தகராறில் குடியரசுத் தலைவர் இராசேந்திரரின் பெயர்கூட இழுக்கப்பட்டிருப்பது காண நான் மிக வருந்துகிறேன்" என்றும், "குடியரசுத் தலைவர் இதுகுறித்துத் தான் மிகவருந்துவதாக என்னிடம் கூறினார்" என்றும் பண்டிதர் கூறியிருக்கிறார்!

"பஞ்சாபில் நடைபெறும் இந்தக் கிளர்ச்சி தென்னாட்டில் எதிரொலித்திருக்கிறது; தென்னாட்டவர், தங்கள்மீது இந்தி திணிக்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டுகின்றனர் என்றும் பண்டிதர் கருத்தறிவித்தாராம்!

"விரும்புகிற வகையான பலன்களை எந்தவித நிர்ப்பந்தமும் தராது, மக்களுக்கு நமது கருத்தை எடுத்துச்சொல்லி, அவர்கள் நம்மை அறிந்துகொள்ளச் செய்யவேண்டும்; இதற்கு நாம் அவர்களிடம் அன்பு காட்டவேண்டும்—அவர்களைப் புரிந்துகொள்ள வேண்டும். இதை மனதில் கொண்டுதான், ஆட்சி மொழிக் குழுவின் அறிக்கைபற்றி முடிவு எடுக்கவேண்டும்" என்றும் பண்டிதர் கூறினாராம்!

மாநிலப் பள்ளிகளில் கட்டாயப்பாடமாக இந்தி!

மத்தியக் கல்வி ஆலோசனை போர்டில் விவாதிப்பார்களாம்!

'சுற்றறிக்கை வந்து சேரவில்லை' என்கிறார் நிதி மந்திரி சி. சுப்பிரமணியம்

சென்னை, அக். 24—

"டெல்லி சர்க்காரின் கல்வி இலாகா வகுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள — பள்ளிகளில் இந்திப் படிப்பு பற்றிய திட்டம் பற்றி, மத்திய கல்வி ஆலோசனை போர்டு, வரும் ஜனவரியில் கூடும் போது விவாதிக்கப்படலாம்" என்று சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம், இன்று பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

மத்திய சர்க்கார் கல்வி அமைச்சரவை அனுப்பியுள்ளதாகக் கூறப்படும் சுற்றறிக்கை தங்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

ஒரு லட்சம் டன் உபரி அரிசி

வடநாட்டு ஏற்றுமதிக்கு தயார் என அறிவிப்பு

ஐதராபாத், அக். 24—

டிசம்பர் இறுதிக்குள் ஒரு இலட்சம் டன் வரை, அரிசியை, பற்றாக்குறைமிக்க மேற்குவங்கம், பீகார் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பித்தரத் தயாராக இருப்பதாக ஆந்திர அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் கூறியுள்ளனராம்.

இப்போது ஆந்திராவில் உபரியாக ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் டன் அரிசி இருப்பதாகவும், டிசம்பருக்குள் மேலும் பத்தாயிரம் டன் அதிகமாகக் கூடும் என்றும், தென் உணவு மண்டலத்தின் தேவை 50 ஆயிரம் டன் வரை தான் இருக்கும் என்றும், எனவே எஞ்சியுள்ள ஒரு இலட்சம் டன் அரிசியையும் வடநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் ஆந்திர அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் சங்கச் செயலாளர் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

காரணம் இதுதானு!

புதுடில்லி, அக். 25—

அடுத்த திங்கள் இங்கு கூடவிருக்கும் 19-வது செஞ்சிலுவை மாநாட்டில் பார்மோசாவின் பிரதிநிதியோ, பார்மோசா செஞ்சிலுவைப் பிரதிநிதியோ கலந்துகொள்ளப் போவதில்லை என்று தெரியவருகிறது.

இதற்குக் காரணம், தேசிய சீன அரசாங்கம் பார்மோசாவைப் பகைத்துப் பேசியுள்ளதே என்று தெரியவருகிறது.

இலங்கையிலிருந்து குடியேறியவர்களுக்கு வாழ்வு

அளிக்கக் கோரி தீர்மானம்

நெல்லை, அக். 25—

இலங்கையிலிருந்து விரட்டப்பட்ட தென்னவர்களின் புது வாழ்வுபற்றி, நகரத்தில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது.

நெல்லைக்கு மட்டும் 50,000 பேர் இலங்கையிலிருந்து வந்துள்ளனர் என்றும், மேலும் 50,000 பேர் வரக்கூடும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது சிறு தொழில்கள் மூலம் அவர்களுக்குப் புதுவாழ்வு அளிப்பது நடைமுறையில் பயன் தரக்கூடியதாக இல்லை என்றும், திருச்செந்தூரில் ஓர் ஆலை துவக்கவும், நான்குநேரியில் ஒரு ஆலை துவக்கவும் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்றும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்திக்கு ஆதிக்கம் கோரி ஆர்ப்பாட்டம்

ஆரிய சமாஜத் தலைவருக்குக் குடியசுரத் தலைவர் பேட்டி

புதுடில்லி, அக். 23—

பஞ்சாபில் இந்திக்கு ஆதிக்கம் கோரி ஆரிய சமாஜத்தினர் கடந்த ஐந்து மாதகாலமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர் அல்லவா?

அந்த மொழித் தகராறு குறித்து விவாதிப்பதற்காக ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவருள் ஒருவரான ஜி. எஸ். குப்தா என்பார், குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத் அவர்களைச் சந்தித்துப் பேசினாராம்!

கிளர்ச்சி செய்யும் ஆரிய சமாஜத்தின் நோக்கம், பஞ்சாப் மாநிலத்தின் பிரதேச மொழிகளான இந்தி, பஞ்சாபி இரண்டிற்கும் முழுச் சுதந்தரம் வேண்டும்—பஞ்சாபில் இந்தி வழங்கும் பிரதேசம் ஒரு மொழிப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்—என்பதுதான் என, குப்தா, இராசேந்திரருக்கு விளக்கினாராம்!

குடியரசுத் தலைவர் தெரிவித்த கருத்துக்கள் என்னவென்பது தெரியவில்லையாம்!

சிக்கனமே தவிர ஆட்குறைப்பு அல்ல!

மந்திரி பக்தவத்சலம் கூறுகிறார்

சென்னை, அக். 24—

நிர்வாகப் புனரமைப்பு, ஆட்குறைப்பு இவைபற்றி ஆராய நியமிக்கப்பட்ட மந்திரி சபை துணைக் குழுவின் சிபாரிசுகளின்படி, இப்போதுள்ள சர்க்கார் ஊழியர்களில் எவரும் ஆட்குறைப்பிற்கு ஆளாகமாட்டார்கள் என்றும், நிர்வாகச் செலவுகளை மட்டுப்படுத்தி சிக்கனமாக நிர்வாகத்தை நடத்துவதே நோக்கம் என்றும் மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

உயர்தரக் கல்விப் பொறுப்பு

'முழுவதையும் சர்க்காரே ஏற்க வேண்டிய காலம் நெருங்குகிறது'

சி. டி. தேஷ்முக் கருத்து

சென்னை, அக். 24—

"உயர்தரக் கல்விப் பொறுப்பு நெடு நாட்களாகத் தனிப்பட்டவர்களினால் ஏற்று நடத்தப்பட்டு வந்திருக்கிறது; இனி அது, சர்க்காரின் கைக்கு மாற்றப்பட வேண்டும்"

என்று சி. டி. தேஷ்முக் இராயப்பேட்டை புதுக் கல்லூரியில் பேசும்போது தெரிவித்திருக்கிறார்.

"உயர்தரக் கல்வி அளிப்பதற்கு, இதுவரை தனிப்பட்டோரின் 'கருணை ஊற்று' பயன்பட்டுவந்தது; இந்த ஊற்று, காலப்போக்கில் வற்றிவருகிறது; ஏனெனில் தனிப்பட்டவர்கள் சேமிக்கும் பொருள், பலவகையிலும் ஏதாவது ஒரு வகையில் சர்க்காரால் உறிஞ்சப்பட்டு விடுகிறது; எனவே, சர்க்காரே இந்தக் கல்வி அளிக்கும் பொறுப்பை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நெருங்கிவருகிறது"

என்றும் தேஷ்முக் அவர்கள் கூறியிருக்கிறார்.

மேலும் பேசிய அவர், 'பல்கலைக்கழக மானியக் கமிஷன், நேரடியாகவே கல்லூரிகளுக்கு நிதி உதவி அளிப்பதில் சட்டப்படி தவறு ஏதும் இல்லை; ஆனால், கல்லூரிகள் இணைக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகங்களின் சம்மதம் தான் வேண்டும்' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

பல்கலைக்கழகப் படிப்பிற்காக ரூ.21 கோடியும், கல்லூரிக் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 10 கோடியும் இரண்டாம் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன; திட்டத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் அனைவருக்கும் தெரிந்ததே; இதனால் கல்விக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு குறைக்கப்படும் என்று சொல்வதற்கு இல்லை' என்றும் தேஷ்முக் கூறியுள்ளார்.

ஆழ்கடல் அணுகுண்டு

வாஷிங்டன், அக். 24—

கடலுக்குள் செல்லும் நீர்மூழ்கி (சப்மரீன்)களை அழிக்கக் கூடிய அணுகுண்டை அமெரிக்கா கண்டுபிடித்துள்ளதாம்!

அட்லாண்டிக் கடற்படையில் ஏற்கனவே இது பொருத்தப்பட்டுள்ளதாம்!

இந்தக் குண்டுகளை விமானத்திலிருந்தே வீச முடியுமாம்!

வடநாட்டு மாநிலங்களில் உணவுப் பற்றாக்குறை

சமாளிக்க டெல்லி மேற்கொள்ளும் சுறுசுறுப்பான நடவடிக்கைகள்

பாட்னா, அக். 24—

பீகார், ஒரிசா, உ. பி., மேற்கு வங்கம் முதலிய வடநாட்டு மாநிலங்களில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறதாம்.

இதனைச் சமாளிக்க, ஏராளமான உணவுப் பொருளை அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிவருமாம்!

இதற்காக சர்க்கார் தங்களின் இறக்குமதிக் கொள்கையைத் திருத்தி அமைக்க நேரிடுமாம்.

இந்தத் தகவல்களை எல்லாம், டெல்லி உணவு மந்திரி ஏ. பி. ஜெயின், இங்கு பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

"வரப்போகிற மாதங்களில் உணவுப் பொருள் இறக்குமதி அதிகரிக்க வேண்டும்; இல்லாவிடின், ஜனவரியில் எல்லாம், நாம் நமது சேமிப்பு உணவைக் காலி செய்யவேண்டி வரும்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சர்க்கரை உற்பத்தி

புதுடில்லி, அக். 25—

நடப்புப் பருவத்தில் 1957-அக்டோபர் 15-ந் தேதிவரையில் இந்தியாவில் மொத்தம் 20,25,000 டன் உள்நாட்டுச் சர்க்கரை உற்பத்தியாயிற்று; சென்ற வருடத்தில் இதற்குச் சரியான காலத்தில் மொத்தம் 18,19000 டன் சர்க்கரை உற்பத்தியாயிருந்தது.

நம் நாடு

சென்னை 25—10—57 வெள்ளி

தமிழ் மக்களின் ஆவல்

தங்களது மூர்க்கத்தனமான இந்தித் திணிப்பு நடவடிக்கைகள், பொதுவாக இந்தி வழங்காத பகுதிகளிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டிலும் அமைதியாக வளர்ந்துவரும் இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுக்குப் புதிய வீரியத்தையும், எதிர்பாராத அரண்களையும் தேடித்தந்துவருவதை வடநாட்டு வெறியர்களும், அவர்களது அடிச்சுவட்டில் தங்களது எதிர்காலத்தைக் காணும் 'அகில இந்தியா'க்களும் இத்தனை நேரம் கண்டிருக்க வேண்டும்.

மாமலை காண கண்ணாடி தேடும் பார்வை பலமுடையவர்களைப் பற்றியோ, மிஞ்சிப்போன ஆணவத்தால் இமைகளை இழுத்து மூடிக்கொள்பவர்களைப் பற்றியோ நாம் கவலைப்பட்டுக்கொண்டிருக்க முடியாது. ஆனால், பொறுப்பிலிருக்கும் சிலராவது, தாங்கள் வெறிக் கூட்டத்தினின்றும் விலகியவர்கள் என்பதை உலகிற்குக் காட்டிக்கொள்வதற்கேனும், கைக்கொண்டிருக்கும் அலட்சியத்தை உதறித்தள்ளி, இந்தச் சக்திகளை உற்றுநோக்கி அவற்றின் ஆற்றலை அறிந்துகொண்டு பயன்பெறவேண்டும் என நாம் விரும்புகிறோம்.

ஆனால், பொறுப்பிலிருக்கும் பெரியவர்களே இந்தி வெறியர்களுக்குத் தலைமை தாங்குகிறவர்கள் என்பதைச் சுலபத்தில் அடையாளம் காணும் வாய்ப்பை, அவர்களே தந்துவிட்டிருப்பதும் உண்மைதான். அதனால்தான், அவர்களிடமிருந்து அலட்சியம் அகலும்—ஆணவம் மட்டுப்படும்—நிதானம் முளைவிடும் என்று எதிர்பார்ப்பது, நம்போன்றவர்களுக்குச் சற்று சிரமமானதாக இருக்கிறது.

இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அணி திரண்டுவரும் சக்திகள், இந்தப் பெரியவர்களுக்கு, நியாயங்களை எழுத்து மூலமும், பேச்சு மூலமும் உணர்த்திவிடலாம் என்று கருதி, உருவான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் காலந்தாழ்க்கும் ஒவ்வொரு கணமும், இந்தித் திணிப்பு வெகு தீவிரமாகிவருவதையும் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்க வேண்டும்.

இந்தி என்றைக்குமே இந்தியாவின் ஒரே ஆட்சி மொழியாக்கப்படக் கூடாது என்பதற்குரிய மிகத் தெளிவான நியாயங்கள், அடுக்கிக் காட்டப்பட்டுவிட்டன.

இந்திதான் வேண்டும் என்ற —வெறியர்கள் எழுப்பிவரும்— நியாயங்களின் போலித்தன்மை முழுவதுமாக அம்பலப்படுத்தப்பட்டுவிட்டது.

இந்தி திணிக்கப்படுவதால், இந்தி பேசாத மக்களுக்கு—குறிப்பாகத் தென்னாட்டவருக்கு நேரக்கூடிய மிகக் கொடிய ஆபத்துக்கள், வரையறுத்துச் சொல்லப்பட்டாயிற்று.

இந்த ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக்கொள்ள, இந்தி ஏகாதிபத்தியத்தை முழு மூச்சுடன் எதிர்த்துத் தீரவேண்டிய அவசியம் புலப்பட்டு, எதிர்ப்புச் சக்திகளுடன் தங்களை இணைத்துக்கொள்வோரின் தொகை நாளும் பெருகிவருகிறது.

இந்தித் திணிப்பை எதிர்ப்போரின் நியாயங்களை மறுத்துரைக்க இயலாத நிலையில், இதுபற்றிச் சிந்திக்க அவகாசம் எடுத்துக்கொண்டிருக்கும் டெல்லிப் பெரியவர்கள் ஒரு விவேகமான முடிவுக்குவரத் துணைபுரியும் வகையில், எதிர்ப்புச் சக்திகள் தங்களது கருத்தை ஏற்கனவே ஒருமித்த குரலில் தெரிவித்திருக்கின்றன—தமிழ் நாட்டின் செல்வாக்கு வாய்ந்த தலைவர்கள் அனைவரும் கூடி, 'ஆங்கிலமே இந்தியாவின் பொது மொழியாக இருக்க வேண்டும்' என்று இந்தித் திணிப்புக் குழுவிடம் தந்த அறிக்கையைத்தான் குறிப்பிடுகிறோம்.

மொழிக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு உருவாகியுள்ள இந்தக் கட்டத்தில், இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் சக்திகள் தங்களது ஒற்றுமையை மேலும் நெருக்கமாக்கிக்கொண்டு எதிர்ப்பை ஒருமுனைப்படுத்திச் செயல்படுவதில்தான் அவற்றின் விவேகமும், ஆற்றலும் வெளிப்படவேண்டும்; அப்போதுதான் எதிர்பார்க்கிற பலன் கிடைக்க முடியும்; இந்தி ஏகாதிபத்தியத்தை முறியடிக்கமுடியும்.

இந்த ஒற்றுமை நெருக்கமாவதற்கு, எதிர்ப்புச் சக்திகளின் நிலை மேலும் தெளிவாக்கப்படவேண்டியிருக்கலாம்.

உதாரணமாக, சில பெரியவர்கள், இந்தி ஆட்சி மொழியாவதை எதிர்ப்பது, மாநிலப் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாக்கப்படுவதை எதிர்ப்பதாகாது என்று கருதுகிறார்கள் போலத் தெரிகிறது.

டெல்லியின் மொழிக் கல்விக் கொள்கைபற்றிய சுற்றறிக்கை இடும் கட்டளையை இந்தப் பெரியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது நமது கடமை எனக் கருதுகிறோம். அதில், மூன்றாவது மொழியாக, இந்தி வழங்காத பகுதி மாணவர்கள் இந்தியைக் கற்கவேண்டும் என்றும், இந்தி பேசும் பகுதியினர் வேறு ஏதாவது ஒரு **வடநாட்டு** மொழியைக் கற்க வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. இதிலும், வடநாட்டவரின் ஏகாதிபத்திய குணவிசேஷம், முகம் காட்டுவதை நம்மால் காணமுடிகிறது.

இதுவரை, டெல்லியில் உள்ள டாக்டர் இராசேந்திரர் போன்றவர்கள், 'வடநாட்டவர் தென்னாட்டு மொழிகளைக் கற்க வேண்டும்' என்ற பேச்சுக்களின் மூலமாகவே, தென்னாட்டில் இந்திக்கு உள்ள எதிர்ப்பைச் சமாளித்துவிடலாம் என்று கருதி, அவ்வாறு மயக்குமொழி பேசினர்.

ஆனால், நடைமுறையில், உத்தரவோ, நேர் எதிரானதாயிருப்பது, அவர்களது அந்தரங்க ஆசைகளை வெளிச்சமிட்டுக் காட்டியிருக்கிறது என்பதுடன், தமிழ் மக்களை எவ்வளவு பெரிய ஏமாளிகளாக அவர்கள் கருதுகிறார்கள் என்பதையும் சொல்லாமற் சொல்லுகிறது.

மேலும், கட்டாயமாக இங்கு இந்தி போதிக்கப்படுவதை இன்று எதிர்த்து முறியடிக்காவிட்டால், சில பல ஆண்டுகளுக்குப் பிறகு, 'இந்தியைத்தான் எல்லோரும் கற்றிருக்கின்றனரே, அதை ஆட்சிமொழியாக்க எதிர்ப்பு ஏன்?' என்று வடவர் கேட்கக்கூடிய ஆபத்தும் இந்தச் சந்தர்ப்பத்தில் உணரப்படவேண்டும்.

பள்ளிகளில் இந்தி கட்டாயப் பாடமாவதை எதிர்க்கவில்லை என்றால், இந்தி என்றைக்குமே இந்தியாவின் ஆட்சிமொழியாகக்கூடாது என்பதற்காகக் காட்டப்பட்டுள்ள நியாயங்கள் வலுவிழந்து போகக்கூடும்.

எனவே, இந்தி ஏகாதிபத்தியத்தை எதிர்ப்போர் தங்களது நிலையை எதிர் வாதங்களுக்கு இடமின்றித் தெளிவாக்குவதின் மூலம்தான்—இந்தியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குவது இந்தி ஏகாதிபத்தியம் நிரந்தரம் பெறுவதற்கான ஒரு முன்னேற்பாடு என்பதையும் திட்டவட்டமாக்கினால்தான்—எதிர்ப்புச் சக்திகளின் ஆற்றல் கூடும்—ஒற்றுமை உரம்பெறும்.

எதிர்ப்புச் சக்திகள் அத்தனையும் ஒன்றுபட்டு இந்தி ஏகாதிபத்தியத்தின் முதுகிற்கு மண் காட்டுவதைத்தான் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்நோக்குகின்றனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

“சமுதாயத்தில் ஏற்படும் சமூக, பொருளாதார, ஜனநாயக, மாற்றங்களுடன் தொடர்புபடுத்திச் சட்டத்தை நீதிபதிகள் மதிப்பிடுவது கூடாது” என்று, சர். ஸி. பி. இராமசாமி அய்யர் தஞ்சை வழக்கறிஞர்கள் மன்றத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

‘திட்டத்தைக் குறைத்தால் வேலையின்மை அதிகரிக்கும்’

இந்திய உதவி நிதி அமைச்சர் கூறுகிறார்

சைகோன், அக். 24—

“இரண்டாவது திட்டத்தால் இந்தியாவின் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்துவிடப் போவதில்லை; ஆனால், புதிதாக மேற்கொண்டு வேலையின்மை அதிகரிப்பதைத் தடுக்கும்.

“எனவே, திட்டத்தைக் குறைப்பது இந்த ஐந்தாண்டுகளில் வேலையின்மையை அதிகப்படுத்துவதாகும்”

என்று, இந்திய உதவி நிதி அமைச்சர் பகத், கொழும்பு திட்ட அமைச்சர்கள் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்குத் தொழில் வாய்ப்பு

தொழில் மாநாடு வற்புறுத்தல்

கல்கத்தா, அக். 24—

பெண்களுக்கு, தொழில்களில் ஈடுபடும் வாய்ப்புக்களை உண்டாக்கவேண்டுமென்றும், தொழில்களை நவீன முறைகளுடன் ஒழுங்குபடுத்துவதால் வேலையிலிருந்து நீக்கப்பட இருக்கும் பெண்களுக்கும் மாற்று வேலைகள் தர முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் இங்கு நடைபெற்ற தொழில் மாநாடு யோசனைகள் கூறியுள்ளது.

சட்டம் ஏட்டுச் சுரைக்காயாகிறதே!

இலட்சுமி மேனன் கவலை

மைசூர், அக். 24—

“ஆண்களுக்குச் சமமாக எல்லா உரிமைகளும், சமத்துவமும் பெண்களுக்கு அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ளன; ஆனால், பெண்களுடன் ஆண்கள் ஒத்துழைக்கவில்லை; சமத்துவமளிக்க முன்வருவதில்லை. எனவே, சட்டம் வெறும் ஏட்டு சுரைக்காயாக பயனற்றுப் போய்விடுகின்றது”

என்று, மத்திய உதவி அமைச்சர் திருமதி இலட்சுமி மேனன் இங்கு தெரிவித்துள்ளார்.

ஆப்பிரிக்காவில் மிருகத்தனம்

பெண்கள்மீது பிரம்படிப் பிரயோகம்

டிரான்ஸ்வால், அக். 24—

தென்னாப்பிரிக்காவில் நிற வெறிக் கொடுமை நாளுக்குநாள் அதிகரித்துவருகிறது.

கருப்பர்களுக்குப் பல அநீதிகள் இழைக்கப்பட்டுவருவதில் ஒரு புதிய கட்டம் ஏற்பட்டுள்ளது.

கருப்பர் பெண்கள் மட்டும் அடையாளச் சீட்டுகள் வைத்துக் கொண்டிருக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வேற்றுமையை வளர்க்கும் இந்த அநாகரிகத்தை எதிர்த்துப் பல இடங்களில் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், எதிர்ப்புக்கு மதிப்பு தராமல், அரசாங்கம், சில இடங்களில் கட்டாயப்படுத்தி ‘அடையாளச் சீட்டு’களை வழங்கியுள்ளது; இந்தப் பணியில் 4 தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று கோரி 400 பெண்கள் அமைதியாக அணி வகுத்துப் போலீஸ் நிலையத்திற்கு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

போலீஸ் தலையிட்டு, பிரம்படிக் கொடுத்து, சில பெண்களைக் காயமுறச் செய்து, கூட்டத்தைப் பயமுறுத்திக் கலைத்துள்ளனர் என்று தெரியவருகிறது.

‘சேலம் மாவட்டத்தில் கனரக இரும்பு-எஃகு, காகிதத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துக’

பஞ்சாயத்துக்கள் மாநாட்டில் கோரிக்கை

சேலம், அக். 25—

சேலம் மாவட்ட பஞ்சாயத்துக்களின் முதல் மாநாடு 19, 20-ந் தேதிகளில் சூரமங்கலம் சுப்பிரமணிய நகரில், திருவள்ளுவர் பந்தலில், முன்னாள் அமைச்சர் டாக்டர் குருபாதம் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புக் குழுத் தலைவரும், சூரமங்கலம் பஞ்சாயத்துத் தலைவருமான டாக்டர் எஸ். எம். நமசிவாயம் எல்லோரையும் வரவேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“சேலம் மாவட்டத்தில் 829 பஞ்சாயத்துகள் உள்ளன : அவற்றில் 35 முதல் வகுப்பு பஞ்சாயத்துக்கள் ; மற்றவை சிறிய பஞ்சாயத்துக்கள்.

“மாவட்ட ஆட்சி மன்றங்கள் இனி இருக்காது என்று சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது; இதுகுறித்துப் பஞ்சாயத்துக்கள் தெரிவித்த கருத்துக்கள் என்னவாயிற்று என்று தெரியவில்லை!’?

சேலம் மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர் டி. எம். காளியண்ணன் எம்.எல்.ஏ. குறிப்பிட்டதாவது :

“மக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால்தான் திட்டங்கள் வெற்றி பெறும் என்ற எண்ணத்தில் பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரங்களை அளிக்க அரசாங்கம் விழைகின்றது. எதிர்காலத்தில் பஞ்சாயத்துக்களுக்குப் பொறுப்பும் கடமையும் அதிகம் இருக்கும்.

“பஞ்சாயத்துக்களுக்கு அதிக பொருள் வசதி இருந்தால்தான் கிராமங்களுக்கு அதிக நன்மைகள் செய்ய முடியும்; ஆகவே, பஞ்சாயத்துக்களுக்குப் போதுமான பொருள் வசதி செய்துகொடுக்குமாறு அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

“சேலம்மாவட்டத்தில் போதுமான கல்லூரிகள் இல்லை; சேலம் நகரில் ஒரே கல்லூரிதான் இருக்கிறது. தொழிற்கல்லூரி, கல்லூரி ஆகியவைகளை ஆரம்பிக்க சேலம் மாவட்ட ஆட்சிமன்ற இரயில்வே ‘செஸ்’ நிதியிலிருந்து நன்கொடை அளிக்கச் செய்திருக்கும் தீர்மானத்தை அங்கீகரித்து சேலம் மாவட்டத்தில் கல்லூரிகளை ஆரம்பிக்க உதவிபளிக்குமாறு அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.”

மாநாட்டை அமைச்சர் திருமதி லூர்து அம்மையார் துவக்கி வைத்தார்; அம்மையார் குறிப்பிட்டதாவது :—

“சேலம் மாவட்டத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 70 சதவிகிதத்தினருக்குப் பஞ்சாயத்துக்கள் உள்ளன; சென்னை மாநிலத்தில் 7,000-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் உள்ளன.

“மாவட்ட ஆட்சிமன்றங்களை எடுத்துவிட அரசாங்கம் முடிவு செய்திருப்பது தெரிந்ததே. மாவட்ட ஆட்சி மன்றங்கள் எடுக்கப்பட்டபின், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றின் பொறுப்பு அதிகமாகும்.

“நம் நாட்டில் உள்ள மக்கள் எல்லோரும் கல்வியறிவு பெற்றவர்களாக இல்லை. கல்வியறிவில்லாத பலர் தங்கள் அனுபவத்தால் சிறப்பாக காரியங்களைச் செய்வதைப் பார்க்கிறோம்.”

மாநாட்டிற்குத் தலைமைவகித்த முன்னாள் மந்திரி டாக்டர் குருபாதம் குறிப்பிட்டதாவது :—

“இப்பொழுது பணவசதி உள்ளவர்கள்தான் தேர்தலில் நிற்க முடிகிறது; சேவை செய்யும் எண்ணமுடைய பலர் பணவசதி இல்லாததால் தேர்தலில் நிற்க முடியாமல் இருக்கிறது.

“இப்பொழுதுள்ள கல்வி முறை சிறந்ததாக இல்லை.”

டாக்டர் மா. இராசமாணிக்கனார், திருவாளர்கள் கே. இராமலிங்கனார், எஸ். நாகராசமணியகார் எம்.எல்.ஏ., மற்றும் பலர் பேசினர்.

தீர்மானங்கள்

சேலத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கனரக இரும்பு-எஃகு உற்பத்தித் தொழிற்சாலை, காகித உற்பத்திச் சாலை, ‘தெர்மல் பவர் ஸ்டேஷன்’ ஆகியவை ஏற்படுத்துமாறு மாநில, மத்திய அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேறின.

தந்தி—தபால், இரயில்வே வருமான இலாபத்தில் ஒரு பகுதியை பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்குமாறு மத்தியப் பேரரசைக் கேட்டுக்கொண்டும், அரசினருடன் தபால் போக்குவரத்தைத் தமிழிலேயே நடத்த ஏற்பாடு செய்யுமாறு அரசியலாரைக் கேட்டுக் கொண்டும், சென்னை கவர்னர் ஏ. ஜே. ஜான், கலைவாணர். என். எஸ். கிருஷ்ணன், தேவதாஸ் காந்தி, டாக்டர் பி. வரதராசுலு நாயுடு முதலியவர்கள் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அக். 13: இந்தித் திணிப்புக்கு
தென்னகம் காட்டிய மாபெரும் எதிர்ப்பு

நாடெங்கும் கண்டன ஊர்வலங்கள் --- பொதுக்கூட்டங்கள்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக் கிணங்க, **13-10-57** அன்று நாடெங்கிலும்—கடல் கடந்த நாடுகளி லும் மிகச் சிறப்புற இந்தி எதிர்ப்பு நாள் கோண்டாடப்பட்டுள்ளது.

தி. மு. கழகக் கிளைகளும், ஏனைய சார்பு மன்றங்களும், பிற போதுநல நிறுவனங்களும் இந்த 'இந்தி எதிர்ப்பு நாள்' நிகழ்ச்சி களில் பங்கேற்றிருக்கின்றன ; அந்நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் சுருக்கமாக இங்கு தரப்படுகிறது :—

சென்னையில்:

1-வது வட்டம் :

காலை 9 மணியளவில், தி. மு. கழகச் சார்பில், புதுவண்ணை அண்ணு படிப்பகத்திலிருந்து தோழர் எம். கே. பட்டாபி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு பல முக்கிய தெருக்களின் வழியாக வலம்வந்தது, ஊர்வலத்தில் ஏராளமான பொதுமக்களும், கழகத் தோழர்களும் கலந்துகொண்டதுடன், மற்றும் தமிழ் வளர்ச்சி மன்றம், வள்ளுவர், இளைஞர் மன்றம், கே. வி. கே. சாமி படிப்பகம், குறள் அறிவு மன்றம், அழகிரி படிப்பகம் ஆகியவைகளும் பங்கேற்றன; கழகக் கொடியுடனும் இந்தி எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய தட்டிகளுடனும் சென்ற ஊர்வலம் முதல் வட்ட தி. மு. க. பணிமனையில் முடிவடைந்து தலைவர் பட்டாபி அவர்களால் தீர்மானங்கள் வாசிக்கப் பெற்று குழுமியிருந்த மக்களால் ஏகமனதாக கையொலிகள் மூலம் நிறைவேற்றப்பட்டன.

1[illegible]-வது வட்டம் :

காலை 9 மணிக்கு, கே. வி. கே சாமி நினைவுப் படிப்பகத்தின் சார்பில் ஊர்வலம் நடைபெற்று, கிளை தி. மு. கழகப் பணிமனையை வந்தடைந்து, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

18-வது வட்டம் :

காலை 10 மணிக்கு கிளைக்கழகப் பணிமனையிலிருந்து, தோழர் கே. சுப்பிரமணி தலைமையில் ஓர் ஊர்வலம் புறப்பட்டு கண்டன ஒலிகளுடன் வட்ட முழுவதும் சுற்றிவிட்டு, பிறகு பணிமனையில் வந்தடைந்து, கூட்டம் நடத்தித் தீர்மானங்களை நிறைவேற்றிய பின், இந்தி நம் தாயகத்தில் நுழைந்தால் ஏற்படும் தீமைகளை விளக்கிப் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

27-வது வட்டம்:

காலை 10 மணிக்கு, கே. ஏ. இராமநாதன் தலைமையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் வட்ட வீதிகளிலெல்லாம் எதிர்ப்பொலிகளை எழுப்பியவண்ணம் சென்றது. இவ்வூர்வலத்தில் 27-வது வட்ட அறிவியக்க மன்றமும் கலந்துகொண்டது; வடநாட்டவர்கள் நிரம்பியுள்ள பகுதியான 5 வீதிகளில் ஊர்வலம் செல்கையில் ஆங்கிலத்தில் எதிர்ப்பொலிகளை எழுப்பியபோது கூட்டம் கூட்டமாக வடநாட்டவர்கள் சூழ்ந்துகொண்டு ஆச்சரியமுடன் ஒருவருக்கொருவர் உரையாடிக் கொண்டிருந்தனர். ஊர்வலம் வட்ட பணிமனையை அடைந்ததும் முடிவடைந்தது.

35-வது வட்டம் :

சென்னை - கோடம்பாக்கம் தி. மு. கழகப் பணிமனையிலிருந்து காலை 9 மணிக்கு மாபெரும் சைக்கிள் ஊர்வலம் தோழர் ஏ. எஸ். ஜேசுபாதம் தலைமையில் புறப்பட்டு, வட்டத்தின் எல்லாத் தெருக்களிலும் சுற்றி வந்து, அறிவு வளர்ச்சி மன்றத்தையடைந்தது. அங்கு, தோழர் சா. நெடுமாறன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் மா. செங்குட்டுவன், ஏ. எஸ். ஜேசுபாதம், சா. வில்லவன், சோ. கிருஷ்ணமூர்த்தி கே. பி. மாதவன், இ. வடிவேல், விசுவாசம், துரை அரசன் ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசியபின், இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஊர்வலத்தில் தி. மு. க. கிளை, அறிவு வளர்ச்சி மன்றம், புலியூர் நகரவாசிகள் பொதுநல சங்கம், காந்தியார் பொதுநல சங்கம், அம்பேத்கார் நினைவு மன்றம், தோழமைக் கழகம், அண்ணு அறிவு வளர்ச்சிக் கழகம் ஆகியவை கலந்துகொண்டன.

37-வது வட்டம் :

காலை 9 மணியளவில், சென்னை—இராயப்பேட்டை தி. மு. கழக (37-வது வட்டம்) பணிமனையில் தோழர் ம. கி. இராமலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் பொ. ந. சண்முகம், க. ஏகாம்பரம், டி. ஞானசேகரன், கோ. ச. நீதி மன்னன், கோ. இளவரசு ஆகியோர் இந்தி மொழித் திணிப்பை வன்மையாகக் கண்டித்துப் பேசிய பின், தீர்மானங்கள் ஒரேமனதாக நிறைவேற்றப்பட்டன.

39-வது வட்டம்:

கிளைக் கழகக் கட்டிடத்தில் தோழர் மா. மோகன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; அப்போது பல கிளைக் கழகத் தோழர்கள் இந்தி நம் நாட்டுக்கு அவசியமில்லை என்பதை ஆதாரத்துடன் விளக்கினர்கள். இறுதியில் கூட்டத் தலைவர் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை கூட்டத்தில் நிறைவேற்றினர்.

* * *

சென்னை—எல்லீஸ்புரம் டாக்டர் அம்பேத்கார் படிப்பகச் சார்பில், காலை 10 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

காலை 10 மணியளவில் பகுத்தறிவுப் பாசறைப் பணிமனையில் தோழர் கோ. செல்வராசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

அறிவொளி மன்றத்தின் சார்பில் காலை 10-30 மணிக்கு கிராமத் தலைவர் எம். வேலன் அவர்கள் முன்னிலையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் முத்துசாமி, சி. க. சாமி, எம். நவமணியார் ஆகியோர் பேசினர்; இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டன

42-வது வட்டம் :

கழகப் பணிமனையில் காலை 10 மணியளவில் தோழர் சே. த. சீனிவாசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது ; தோழர்கள் மு. வரதராசன், ஏ. கே. இளஞ்செழியன், கி. கண்ணன், எல். கோபால், க. சந்திரசேகரன், க. சண்முகம் ஆகியோர் பேசினர்; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

50-வது வட்டம்:

மேற்படி வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், 'இந்தி 'தென்னாட்டின்மீது மறைமுகமாகப் புகுத்தப்படுவதையும், ஆட்சியாளர்கள் இம்மொழியை மக்கள் மீது திணிப்பதனையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்' என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சிந்தாதிரிப்பேட்டை :

கலைமணி மன்றக் கட்டிடத்தில் தோழர் வி. எஸ். நடராசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் வேணுகோபால், என். கிருட்டினன், ஏ. என். எஸ். பாபு ஆகியோர் இந்தி நம் நாட்டுக்கு அவசியமில்லை என்பதை விளக்கிப் பேசினர்; இறுதியில் கூட்டத் தலைவர், இந்தி கண்டனத் தீர்மானங்களை கூட்டத்தில் நிறைவேற்றினர்.

ஆலந்தூர் :

கோயில் தெரு, ஆரம்பப் பள்ளியிலிருந்து மாலை 3-30 மணிக்கு, முன்னாள் ஆலந்தூர் காங்கிரஸ் செயலாளரும் திருவள்ளுவர் கழகச் செயலாளருமான தோழர் நல்லபெருமாள் தலைமையில் மலர்ச்சி மன்றம்; வெண்மதி கலா மன்ற நாடகக் குழு, டாக்டர் அம்பேத்கார் மன்றம், ஆதம்பாக்கம் தி. மு. க. கிளை ஆகியவை கலந்துகொள்ள, ஊர்வலம் புறப்பட்டு, வழிநெடுக தோழர்கள் கே. எஸ். புகாரி, எஸ். பாலன், கனி. அருணாசலம், கோவிந்தராசன் ஆகியோர் இந்தி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்ய, ஆலந்தூர், ஆதம்பாக்கம் இவைகளைச் சுற்றிக்கொண்டு, ஆலந்தூர் தர்மராசா கோயில் தெருவில் வந்து முடிவுற்றது; அங்கு குழுமியிருந்த மக்களிடையே இந்தி எதிர்ப்பு விளக்கம் தந்த பிறகு தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு, மக்களின் கையொலி மூலம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

பெரம்பூர் :

டாக்டர் சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றச் சார்பில் 8-30 மணிக்கு தோழியர் சாவித்திரி சபாபதி அம்மையார் தலைமையில் நடந்த பொது உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் அ. சு. மணி, உண்மைவிரும்பி, மு. தாண்டவமூர்த்தி, எத்திராசன், அ. வெங்கடேசன், டி. வி. பாலசுப்பிரமணி ஆகியோர் இந்தி மொழித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர் ; தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

புதுவை :

மாலை, புதுவைத் தி. மு. கழகச் செயற்குழு கூடி, இந்தி கண்டனத் தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றியது. அன்று பொதுக் கூட்டம் நடத்த சர்க்கார் அனுமதிதர மறுத்துவிட்டதால், செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வேலநத்தம் :

இரவு 10½ மணிக்கு பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக்கொண்டுகூட்டம் நடைபெற்றது; ஆட்டையாம்பட்டியிலிருந்து பொதுச் செயலாளர் அவர்களை சுமார் 5,000 மக்கள் வரவேற்று, வேலநத்தம் பொதுக்கூட்டமேடைக்கு அழைத்து வருகையில் 'இந்தி ஒழிக' என்றமுழக்கம்வானைப்பிளந்தது. கூட்டத்திற்கு சேலம் வழக்கறிஞர் வி. சிவப்பிரகாசம் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்.

நாகை :

இந்தி எதிர்ப்பு ஊர்வலம் மேலக்கோட்டை வாயிலிலிருந்து தோழர் கே. பாப்பையன் தலைமையில் புறப்பட்டு நகரின் பல முக்கிய தெருக்களைக் கடந்து மிஷன் உயர்நிலைப் பள்ளி முன்புறமுள்ள திடலை அடைந்தது; அங்கு தோழர் எஸ். கல்யாணம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் பி. எச். முஸ்தபா, அறிவுடைநம்பி ஆகியோர் இந்தி ஒழிப்பு அவசியம் பற்றிப் பேசினர்; இந்தி எதிர்ப்பு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இரங்கூனில் இந்தி எதிர்ப்புக் கூட்டம்

ஒன்றுபட்டுப் போராட மக்களுக்கு அழைப்பு

13-10-57 மாலை 3-30 மணிக்கு இரங்கூன் பொது மருத்துவ நிலையத்திலுள்ள திருவள்ளுவர் படிப்பகத்தில் பர்மா தி. மு. கழகப் பொதுச்செயலாளர் வி. சுப்பிரமணி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தமிழ்ப் பெரியார்களும் பல கட்சிப் பிரமுகர்களும் கழகத் தோழர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசினர்.

தலைவர் தம் முன்னுரையில் இந்தியின் வளமற்ற தன்மையையும், இந்தியைத் தமிழர்கள் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டியதன் இன்றியமையாமை பற்றியும் விளக்கமாகப் பேசினர். திருவாளர்கள் ஆதிசேரன், மு. குமார், கே. திருவேங்கடம், வேங்கைமார்பன், இராமமுத்தழகு, ஏ. வீரபத்திரன் ஆகியோர் இந்தியப்பேரரசு இந்தி மொழியை தமிழ் மக்கள்மீது வலுக்கட்டாயமாகத் திணிப்பதை எதிர்த்தும், கண்டனம் தெரிவித்தும், தமிழர்கள் கட்சிபேதமின்றிக் கலந்து ஒன்றுபட்டுப் போராட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் பேசினர்கள்.

இக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன; இத்தீர்மானங்களை இந்தியப் பேரரசுக்கும். தி. மு. க. தலைமை நிலையத்திற்கும், உள்நாட்டு — வெளிநாட்டு (தமிழ்) இதழ்களுக்கும் அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டு, தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டச் செயலாளர் தா. சோழன் நன்றி கவில, கூட்டம் இரவு 7 மணிக்கு முடிவுற்றது.

விருதுநகர் :

வள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தின் சார்பில் தோழர் சு. கணபதி தலைமையில் நடைபெற்றது; இந்தித் திணிப்பைக் கண்டித்தும், சென்னைக்குத் தமிழ்நாடு பெயர் வைக்கக் கோரி உயிர்நீத்த விருதை தியாகி திரு. க. பெ. சங்கரலிங்கனார் மறைந்த ஓராண்டின் நினைவாக 'தமிழ்நாடு' என்று பெயர்வைக்க அரசியலார் ஆவன செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

மேட்டுப்பாளையம் :

கழகப் பணிமனையிலிருந்து கழகக் கொடிகளை ஏந்திய சைக்கிள் ஊர்வலமும், அதனுடன் கழக வீரர்களும் ஊர்வலமாக முக்கியத் தெருக்கள் வழியாக அன்னபூரணித் திடலை அடைந்தனர்; அங்கு தோழர் எம். எல். ஏசுநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் மே. ஏ. கோதண்டராமன், வி. சண்முகநாதன் ஆகியோர் இந்தி பின் தன்மை, திராவிடர்பால் அதனைத் திணிப்பதன் கருத்து, வடநாட்டு ஏகாதிபத்திய வெறித்தன்மை ஆகியவற்றைப் பற்றி விளக்கியபின், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேறின.

வளவனூர் :

தி. மு. க. சார்பில் பொதுக் கூட்டமும், ஊர்வலமும் நடைபெற்றன; மாலை 6 மணியளவில், தோழர் க. பழனியப்பன் தலைமையிலும், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் முன்னிலையிலும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் சினிமா திடலிலிருந்து ஆரம்பித்து பாண்டிரோடு வழியாகப் பொதுக்கூட்டத்திடலை வந்தடைந்தது; பின்னர் 6-30 மணிக்கு பொதுக்கூட்டம் தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் துவங்கியது; செயலாளர் திரு. நா. நாமதேவன் அவர்களால் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் முன்மொழியப்பட்டு தோழர் ஏ. கிருஷ்ணமூர்த்தி, நடிகர் சண்முகம் ஆகியோரால் வழிமொழிந்து பேசப்பட்டு பின் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களால் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் இந்தி எதிர்ப்பு

தோழர்கள் விளக்கம்

கொழும்பு அழகிரி மன்றப் பணிமனையில் மன்றத் தலைவர் தோழர் மா. மா. சு. முருகசாமி தலைமையில் கொண்டாடப்பட்டது; தலைவர் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை முன்மொழிந்தார், ஒலிகளுக்கிடையில் நிறைவேற்றினர்.

தீர்மானத்தை ஆதரித்து தோழர்கள் மு. க. சந்தேகி, எம். பி. மாதவன், எம்.மோகன், கீ. மு. நலம்விரும்பி, எம். எஸ். முத்துக்கிருட்டினன், எஸ். ஏ. செல்லப்பாண்டியன், எஸ். ஆர். கே. பெருமாள், பி. எஸ். அரசுசெல்வன், பால்சாமி, கே. எம். பசலக், இராசு. முகம்மது, ஏ. எஸ். அகஸ்தியன், மற்றும் பல தோழர்கள் பேசினர்கள்.

அறந்தாங்கி வட்டம் :

பாக்குடி தி. மு. க. கிளை சார்பில் மாலை 4 மணிக்கு, தோழர் ரெ. இலக்குமணன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிட்டங்காடு தி. மு. க. கிளை சார்பில் மாலை 3 மணிக்கு, இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது; தோழர் ஏ. எஸ். அம்மையப்பன் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேறின.

பாண்டிக்குடி தி. மு. க. கிளை சார்பில் மாலை 5 மணிக்கு, செயலாளர் தா. மு. கருப்பையா தலைமையில் கூடிய உறுப்பினர் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மேலப்பட்டு தி. மு. க. கிளை சார்பில் பிற்பகல் 3 மணிக்கு, எஸ். கருப்பையா தலைமையில் கூடிய உறுப்பினர் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெருங்காடு தி. மு. க. கிளை சார்பில் பகல் 2 மணிக்கு, சண்முகம் தலைமையில் கூடிய உறுப்பினர் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேறின.

மணமேல்குடி தி. மு. க. கிளை சார்பில் மாலை 5 மணிக்கு, மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலமும், 6 மணிக்கு பொதுக்கூட்டமும் நடைபெற்றன; தோழர் அகமத்தம்பி தலைமை தாங்கினர்; தோழர் பெரி. சிவனடியான் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மீமிசல் தி. மு. க. கிளை சார்பில் மாலை 4 மணிக்கு, இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடந்தது; 5 மணிக்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு கே. கே. நிசாம்தீன் தலைமைதாங்க, தோழர்கள் இராம. அசோகன், ஆ. துரையாசன் ஆகியோர் உரைநிகழ்த்தினர்; தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மன்னார்குடி :

கீழப்பாலத்திலிருந்து தோழர் ப. நாராயணசாமி குதிரைமீது அமர்ந்து மாபெரும் ஊர்வலத்தை நடத்திச் சென்றார்; ஊர்வலத்தில், மன்னை நகரக் கிளை, மன்னை கே. வி. கே. சாமி மன்றம், திருவள்ளுவர் படிப்பகம், மாணவர் கிளை, எடமேலையூர், எடகீழையூர், எடஅன்னவாசல், செருமங்கலம், காரக்கோட்டை, செருவாக்கோட்டை, பரவாக்கோட்டை, கூப்பாச்சிக்கோட்டை, சந்தன்பேட்டை, கீழத்திருப்பாலக்குடி, ஆலங்கோட்டை, திருப்பாலக்குடி, காளாஞ்சிமேடு, ராயபுரம், மற்றும் பல கிளைக் கழகங்கள் கலந்துகொண்டன; இரவு 8 மணிக்கு மன்னை தேரடியை ஊர்வலம் அடைந்ததும் தோழர் இரெ. கணேசன் தலைமையில் கூட்டம் நடந்தது; தோழர்கள் பலர் பேசினர்; இறுதியில் இந்தி எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

மன்னார்குடி :
தேரடியில்
27—10—57 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
ப. நாராயணசாமி

★

வல்லூர் :
(பொன்னேரி வட்டம்)
மண்ணடித் திடலில்
27—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : யுகந்தரனார்
பேசுவோர் :
கண்ணதாசன்
டி. வி. நாராயணசாமி
வி. எஸ். கோவிந்தராசன்

★

சேலம் :
'வி' மார்க்கெட்டில்
தலைவர் :
பி. கோபாலகிருட்டினன்
பேசுபவர் :
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.
(காலை 10 மணிக்கு 13-வதுவட்ட கிளையில் கலைவாணர் படத் திறப்பு விழாவும் மாலை 5-மணிக்கு 2-வதுவட்ட தி. மு. க. கிளை துவக்கவிழாவும் தோழர் மு. கருணாநிதியவர்களால் ஆற்றப்படும்.)

★

திருவள்ளூர் :
27—10—57 மாலை 6½மணிக்கு
தலைவர் : டி. எத்திராசன்
பேசுவோர் :
ப. உ. சண்முகம் எம்.எல்.ஏ.
இரா. தர்மலிங்கம் எம்.பி.

★

புலியகுளம் (கோவை):
பெண் பாடசாலை முன்புள்ள
அழகிரி திடலில்
27—10—57 மாலை 6½மணிக்கு
தலைவர் : ஆ. மாரிமுத்து
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
மு. இராமநாதன்
கி. ஆ. குப்புராசு

★

கொரடாச்சேரி :
காந்தி பூங்காவில்
27—10—57 இரவு 9 மணிக்கு
தலைவர் : த. கோவிந்தராசன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
எஸ். எம். வைத்திலிங்கம்

★

சின்னாளப்பட்டி :
வள்ளுவர் திடலில்
26—10—57 இரவு 8 மணிக்கு
தலைவர் : எம். வீரண்ணன்
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

எதிர்க் கட்சிகளின்

ஆலோசனை தேவை இல்லையாம்!

புதுடில்லி, அக். 24—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நெருக்கடி நிலையை ஆராய எல்லாக் கட்சிகளையும் ஒன்று கூட்ட வேண்டும் என்பதற்கு பண்டித நேரு மறுத்துள்ளார்.

திட்டக்குழுவிற்குத் தேவைப்படும் ஆலோசனைகளைக்கூற பல அமைப்புகள் உள்ளனவாம்; எனவே எல்லாக்கட்சிகளும் திட்டத்தைப்பற்றி ஆராயவேண்டியதில்லையாம்.

சுரங்கத் தொழிலை நடத்த தனியாருக்கு அனுமதி

புதுடில்லி, அக். 24—

மாநிலங்களிலுள்ள சுரங்க வளத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவின் அந்நியச் செலவாணியைப் பெருக்கும் பணியில் மத்திய அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

தனியாரிடம் சுரங்கத்தொழிலை ஒப்படைக்கத் தேவைப்படும் அனுமதியை மத்திய அரசு அளிக்க முன் வந்துள்ளது என்று தெரிய வருகிறது.

உடுமலை திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்க ஆண்டுவிழா

துணைப் பொதுச்செயலாளர்
என். வி. நடராசன்
கலந்துகொண்டார்

உடுமலை, அக். 25—

22—10—57 காலை 8 மணியளவில் சங்க அலுவலகத்திலிருந்து தோழர் நெடுமாறன் தலைமையில் தாரை, தப்பட்டை, பொய்க்கால் குதிரையுடன் ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய தெருக்களின் வழியாக 9-30 மணியளவில் இரயில் நிலையம் வந்தடைந்தது.

இரயில் நிலையத்தில் தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களை வரவேற்று ஊர்வலமாக அழைத்துக்கொண்டு ஸ்ரீசங்கர் தியேட்டரில் வந்து சேர்ந்தவுடன் ஆண்டு விழாவுக்கான நிகழ்ச்சிகள் தொடங்கின.

விழாப் பந்தலில் தி. ப. தொ. சங்கத்திற்கான கொடியை தோழர் சே. எஸ். சந்தானம் ஏற்றிவைத்தார்; சங்கச் செயலாளர் வெ. காழியப்பன் ஆண்டு அறிக்கை படித்துவிட்டு, சங்கத்தின் ஓராண்டுப் பணியையும் அது வளர்ந்த நிலையையும் விவரித்து வந்திருந்தோரை வரவேற்றார்.

பொள்ளாச்சி தோழர் இராமானுசம் விழாவைத் துவக்கிவைத்தார்; தோழர் இராமநாதன் முன்மொழிய தோழர் ஆறுமுகம் வழிமொழிய துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை வகித்தார்.

தலைவர் தலைமைஉரை ஆற்றிய பின் தீர்மானங்களை முன்மொழிந்து தோழர்கள் வெ. ஆறுமுகம், கோவிந்தசாமி, காளிமுத்து, அப்பாசாமி ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் நிலை குறித்து தோழர்கள் ப. நாராயணன், மதுரை கே. எஸ். சந்தானம் ஆகியோர் பேசினர். தோழர் காழியப்பன் நன்றிகூறலுடன் 2 மணியளவில் ஆண்டுவிழா முடிந்தது.

பொதுக்கூட்டம்

மாலை 7 மணிக்கு திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கச் சார்பில் ஸ்ரீசங்கர் டாக்கீஸில் தோழர் சு. துரை தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் ப. நாராயணன், இரா. சுந்தரம், மு. இராமநாதன், கே. எஸ். சந்தானம், என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஆசிரியருக்குக் கடிதம் :

அரசாங்கத் தேர்வுகள்

தமிழ்நாட்டு அரசாங்கத்தில் அரசாங்க அலுவலகத்திற்கு குமாஸ்தா வேலைகளுக்கும், தாய்மொழி (தமிழ், தெலுங்கு) 'டைப்ரைட்டிங்' ஆகியவற்றிற்கான தேர்வுகள் ஆண்டுதோறும் (அக்டோபர் மாதம்) வேறுவேறு நாட்களில் நடைபெறுகின்றன; ஆனால் இவ்வாண்டு இந்த இரண்டு தேர்வுகளின் தேதிகளையும் ஒரே காலத்தில் வைத்துள்ளனர்; அதாவது, சர்வீஸ் கமிஷன் தேர்வு தேதி 30, 31—10—57; தாய்மொழி 'டைப்ரைட்டிங்' 30, 31—10—57-ல் உள்ளது; இதனால், இந்த இரண்டு தேர்வுகளுக்குச் செல்பவருக்கு இரண்டுக்கும் செல்ல வசதி இல்லை. அதனால் உழைப்பும், காலமும் வீண் ஆகிறது. தயது செய்து அரசாங்கத்தார் இதைக் கவனித்து, தாய்மொழி 'டைப்ரைட்டிங்' தேர்வு நாளை தள்ளிப் போட்டால் மிகவும் நலமாகும்.

வே. தி. சஞ்சீவி
வேலூர் (வ. ஆ.)

பிராவிடண்ட் நிதிச் சட்டம் பரவலாகிறது

24 இலட்சம் தொழிலாளர்கள் பலன் பெறுகின்றனராம்!

புதுடில்லி, அக். 25—

ஊழியர் பிராவிடன்ட் நிதிச் சட்டம், காப்பி பக்குவப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்களுக்கும் பரவலாக்கப்படுவதால் 1957-டிசம்பர் முதல் மேலும் சுமார் 3,600 தொழிலாளர்கள் நிதியின் நன்மையை அடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்!

1952, நவம்பர் மாதம் அமுலுக்குவந்த இந்தச் சட்டம், முதலில் மூன்று தொழில்களில் அமுலாயிற்று; இப்போது இது 25-தொழில்களுக்கும், தோட்டத் தொழில்களுக்கும், சுரங்கங்களுக்கும், பத்திரிகை நிறுவனங்களுக்கும் பரவலாக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தின்படி சுமார் 25-இலட்சம் தொழிலாளர்களுக்கு பிராவிடன் நிதியின் நன்மை கிடைத்துவருகிறது,

ஆ. கார்மேகக் கோனார் மறைவு

★

மதுரை, அக். 25—

சிறந்த தமிழறிஞரும், அமெரிக்கன் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியருமான திரு. ஆ. கார்மேகக் கோனார் 22—10—57 மாலை 5-30 மணிக்கு இயற்கையெய்தினார்.

அவர், இரண்டு நாட்களாக இருதய நோயால் அவதிப்பட்டார். இருமல் வந்தபோது இரத்தம் கொட்டியதால் சிகிச்சைக்காக இங்குள்ள அமெரிக்க நற்பணிக் குழு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சையளித்தும் பலனில்லாமல் திடிரென இயற்கையெய்திவிட்டார்.

திரு. ஆ. கார்மேகக் கோனார் 1889-ம் ஆண்டு டிசம்பர் 27-ம் நாள் இராமநாதபுரம் மாவட்டம் அகத்தாரிருப்பு என்னும் கிராமத்தில் ஆயர்படிக் கோனாருக்கும்-இருளாயி அம்மாளுக்கும் பிறந்தவர்; இவர் இளமையிலேயே தமிழில் நல்ல புலமை பெற்று பல உரைநடை நூல்களும் கவிதைகளும் யாத்திருக்கிறார்.

37 ஆண்டுகள் அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி 1951-ல் ஓய்வு பெற்றார்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடத்திட்டக் குழுவில் தொடர்ந்து 21 ஆண்டுகளும் சென்னை, அண்ணாமலை, திருவாங்கூர் பல்கலைக் கழகங்களில் தேர்வாளர் குழுவில் பல ஆண்டுகளும் உறுப்பினராக இருந்தும் மற்றும், சென்னை சர்வீசுக் கமிஷன், மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுக் குழு, கல்விக் குழு, ஆலோசனைக் குழு ஆகியவற்றிலும் பணியாற்றியிருக்கிறார்.

இவருக்கு 17—1—55-ல் நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் தமிழவேள் பி. டி. இராசன் அவர்களைக்கொண்டு மதுரையில் பொன்னாடை போர்த்தி, 'செந்நாப் புலவர்' என்ற பட்டமும் அளிக்கப் பட்டது.

செந்நாப் புலவரின் மறைவு தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டுக்கும் ஓர் பேரிழப்பாகும். அவர் பிரிவால் துயருறும், அன்னார் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் நண்பர்கட்கும் நம் அனுதாபம் உரியதாகுக. —(ஆ-ர்.)

சென்னை நகர வாக்காளர் பட்டியல்

★

சென்னை நகர வாக்காளர் பட்டியலின் திருத்தப் பதிப்பு வெளியிடுவதுபற்றிய தவணையை நீடித்து, சென்னை அரசாங்கம், கீழ்க்கண்ட விவரங்களை அறிவித்துள்ளது :—

பூர்வாங்க வாக்காளர் பட்டியல் வெளியீடு : 12—11—57

வாக்காளர்கள் திருத்தம் கோரியும், மறுப்புரை எழுப்பியும் மனுச்செய்து கொள்ளும் கடைசி நாள் : 3—12—57

இறுதியாகத் திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள்: 31—12—57

சென்னை நகர தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள்—படிப்பகங்கள் ஆகியவைகளைச் சேர்ந்த நிர்வாகிகளும்—தோழர்களும் தங்கள் தங்களுடையவும், தங்களைச் சார்ந்த தோழர்களுடையவும் பெயர் முகவரி, இன்னும் மற்ற விவரங்களும் வாக்காளர் பட்டியலில் சரியாக உள்ளனவா என்பதை 3—12—57-ம் நாளுக்குள் சரிபார்த்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுச் செய்து கொண்டு தகுதியான வாக்காளர்களாக ஆகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

செங்கற்பட்டு நகர வாக்காளர்களுக்கு :

"செங்கற்பட்டு நகர எல்லைக்குள் இருக்கும் தி. மு. கழகத் தோழர்களும், பொது மக்களும் தங்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படாமலிருந்தாலும் விடுபட்டிருந்தாலும் உடனடியாக செங்கற்பட்டு தாலுக்கா அலுவலகத்தில் சென்று தேர்தல் தாசில்தாரிடம் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்"

என்று, செங்கற்பட்டு நகர தி. மு. கழகச் செயலாளர் செ. கோ. விசுவநாதன் அறிவிக்கிறார்.

இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்

27—10—57 பிற்பகல் 3-மணிக்கு தேவகோட்டை வடக்குச் சிலம்பணி 76 என்னுள்ள தோழர் இராம-வேள்ளையன் அவர்கள் இல்லத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

அவ்வமயம் ஆய்வுக்கு வருபவை :-

1. நம் மாவட்டத்தை இரு பகுதிகளாகப் பிரித்து இரு துணைச்செயலாளர்களை தேர்ந்தெடுத்து செயல்படச் செய்வது ;
2. மாவட்ட மாநாடு நடத்துவது குறித்து மறுபரிசிலனை செய்தல்.

கிளைக் கழகச் செயலாளர்களும் மாவட்டப் பிரதிநிதிகளும் தவறாமல் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவேண்டுமாய், இராமநாதபுரம் மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் கேட்டுக் கொள்கிறார்.

இராணிப்பேட்டை பாரி தொழிலாளர் சங்க மாநாடு

27-10-57 மாலை 4-15 மணிக்கு. மேற்படி மாநாடு தோழர் எஸ். சி. சி. அந்தோணி (பிள்ளை) தலைமையில் இராணிப்பேட்டை ஸ்போர்ட்ஸ்-ரிக்கிரியேஷன் கிளப்பில் நடைபெறும். தோழர் கே. ஆர். கல்யாணராமன் மாநாட்டைத் துவக்கிவைப்பார். தோழர்கள் க. அன்பழகன் எம். எல். ஏ., வி. சுப்பையா, வி. சங்கர் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
26 : சென்னை—மயிலாப்பூர்
27 : நாகப்பட்டினம்
29 : சென்னை—புரசவாக்கம்
30 : கோடம்பாக்கம்
நவ.
1 : கூடுவாஞ்சேரி

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

அக்.
25 : மாலை—நெல்லிக்குப்பம்
26 : காலை—பழனி
மாலை—சத்திரப்பட்டி
இரவு—சின்னாளப்பட்டி
27 : காலை—கச்சமங்கலம்
மாலை—மன்னார்குடி
இரவு—கொரடாச்சேரி
28 : மாலை—காரைக்குடி
அழகப்பா கலைக் கல்லூரி
அழகப்பா பொறியியல் கல்லூரி
இரவு—வேட்டன்விடுதி
29 : காலை—இணங்கனூர்
மாலை—தென்னிலை
இரவு—கரூர்
30 : காலை—இருங்களூர்
மாலை—திருமானூர்
இரவு—அரியலூர்
31 : மாலை—சென்னை

நாகையில் நபிகள் நாயகம் விழா

அண்ணா கலந்து கொள்கிறார்

27—10—57 மாலை, நாகை மீரு பள்ளித் தெருவில் அமைக்கப்பட்டிருக்கும் பந்தலில் திரு. ஏ. கே. ஏ. அப்துஸ் சமது தலைமையில் மேற்படி விழா நடைபெறும்; அன்று அவர்களும், தோழர்கள் சி. சகாவி, எம். ஏ. பக்கர், ஏ. எம். மொய்தீன், எம். எஸ். உசைன் முனவ்வர்பே, எச். அமிரல் ஆகியோரும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவர். நாகூர்-அனிபா இன்னிசையுண்டு.

நக்கீரர் பட்டி மன்றம்

26-10-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை-பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்றத்தில் தோழர் சி. ஆர். இராசமணி தலைமையில் தோழர்கள் கே. எஸ். வெங்கடேசன், த. மா. பாலசுந்தரம், சி. ஜே. முடியரசன் ஆகியோர் 'தமிழகத்தை உருவாக்குவது எப்படி' என்ற பொருள் குறித்துப் பேசுவர்.

சென்னை, அக். 25—

இந்த ஆண்டு பருவமழை தாமதமாக வந்தாலும், நல்ல அறுவடை இருக்கும் என்றுதான் நம்புவதாக நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம்நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை ; நிபந்தனைகளுக்கு விண்ணபித்துக் கொள்க :—

பூதலூர்
திண்ணனூர்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்
பேலூர் (சேலம் மாவட்டம்)
ஆலமரத்துப்பட்டி (கரூர் வட்டம்)
பாகசாலை (மாயூரம் வட்டம்)
சத்திரப்பட்டி

—நிர்வாகி : 'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.